IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 98/2019 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Murugan | CASTE | : | |
| S/O. | Karuppan | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **27-03-2023**

குறுக்கு விசாரணை (வா.சா.1 ஆஜர்.) சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்) : 27-03-2023**

உங்கள் தகப்பனார் கருப்பன் அவர்களால் அவருடைய மைனர் வாரிசுகளை கட்டுப்படுத்தி இந்த பிரதிவாதிக்கு கிரைய பத்திரம் எப்போது எழுதி கொடுத்தார் என்றால் எழுதி கொடுத்தது எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 உங்களால் அலங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் சான்றிட்ட ஆவணம் பெறப்பட்டுள்ளது என்றால் ஆம். வா.சா.ஆ,3ல் உங்கள் தகப்பனார் கருப்பன் அவர்களால் சொத்துக்களை பொறுத்து அவருடைய மைனர் வாரிசுகளை கட்டுப்படுத்தி பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று வில்லங்கம் குறித்து காட்டப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு அவ்வாறு பிரதிவாதி பெயரான ஜேம்ஸ் பெயர் பதிந்துள்ளது. வா.சா.ஆ.3 உங்கள் தரப்பில் கடந்த 25.01.2012ம் தேதியில் சான்றிட்ட ஆவணம் பெறப்பட்டுள்ளது என்றால் ஆம்.

நீங்கள் எந்த வருடம் பிறந்தீர்கள் என்றால் தெரியாது. உங்களுக்கு திருமணம் நடைபெறும் போது உங்களது வயது என்ன என்றால் 22 வயது இருக்கும். உங்களுக்கு குழந்தைகள் உள்ளார்களா என்றால் 2 குழந்தைகள் உள்ளார்கள். முதல் குழந்தைக்கு வயது என்ன என்றால் 23 ஆகும். உங்கள் தகப்பனாருக்கு யார் யார் வாரிசுகள் என்றால் நானும் என்னுடைய சகோதரி சொக்காயி ஆகியோர்கள் ஆவோம். உங்களது சகோதரி சொக்காயி என்பவரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.5ல் கட்டையன் மகன் முருகன் என்று தான் உள்ளது என்றால் என்னுடைய தகப்பனாரை கட்டையன் என்று அழைப்பதுண்டு. உங்களது தகப்பனாரை கட்டையன் என்று அழைப்பது உண்டு என்பதை பொறுத்து உங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை மற்றும் பிரமான வாக்குமூலம் ஆகியவற்றில் குறிப்பிட்டு

தெரிவிக்கப்படவில்லை, ஆவணங்கள் மூலம் நிருபணம் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல, எனது தகப்பனாரின் இறப்பு சான்று, பட்டா ஆகிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன், அதில் கட்டையன் என்று எனது தகப்பனார் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

வா.சா.ஆ.7 ஆன உங்கள் தகப்பனாரின் இறப்பு சான்றிதழில் கருப்பன் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது, நீங்கள் சொல்வதுபோல் கட்டையன் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் கட்டையன் என்பது பட்டப்பெயர் தான், அழைப்பதற்கு மட்டும் கட்டையன் பெயர். பட்டாவில் எனது தகப்பனார் பெயரும் அதன்பின்னிட்டு எனது பெயரும் உள்ளது. உங்களது ஆதார் மற்றும் வாக்காளர் அடையாள அட்டையில் ஆகியவற்றில் கட்டையன் மகன் முருகன் என்று தான் காட்டப்பட்டுள்ளதே தவிர, கருப்பன் மகன் முருகன் என்று இல்லை, அதன் காரணமாக உங்கள் தரப்பில் ஆதார் அடையாள அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அது சரியல்ல.

வா.சா.ஆ,6 கிரைய ஆவணத்தில் உங்கள் தகப்பனார் கருப்பன் அவர்களால் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கும்போது தாவா சொத்து பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றும், புஞ்சை நிலம் என்றும் கூறி பிரதிவாதிக்கு கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து. உங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையில் வழக்கு மூலம் குறித்த தேதி ஏதும் குறிப்பிடப்படாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் உங்களுடைய இந்த தாவா வழக்கு மூலம் இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் அது சரியல்ல. ஆங்கிலேயர் காலத்தில் தாவா சொத்திற்குண்டான பட்டா தொடர்பாக உங்கள் தரப்பில் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, பட்டா தாக்கல் செய்துள்ளேன். உங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பட்டா ஆவணம் உங்கள் தகப்பனார் பெயரில் ஏதும் இல்லை என்றால் அது சரியல்ல. எனது அப்பாவிற்கு பிறகு எனக்கு பட்டா மாறிவிட்டது.

உங்கள் தரப்பில் கருப்பன் பெயரில் இனாம் பட்டாவாக ஆவணம் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அது சரியல்ல. பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திர ஆவணம் குறித்து உங்கள் தரப்பில் மறைக்கப்பட்டு வா.சா.ஆ.1 பெறப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, பத்திரம் எனது தகப்பனார் எழுதி கொடுத்தது தெரியாது. எனது தகப்பனாருக்கு அடுத்து எனக்கு பாத்தியப்பட்டது ஆகும். வில்லங்கம் பார்த்த பின்பு தான் பிரதிவாதி பெயரில் பத்திரம் உள்ள விபரம் எனக்கு தெரிய வந்தது. வில்லங்க ஆவணம் தொடர்பாக உங்கள் தரப்பில் கடந்த 2012ம் வருடம் தெரிந்து கொண்டதற்கு பின்னிட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமல் காலம் கடந்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது சரியல்ல. பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை பொறுத்து

உங்கள் தரப்பில் ரத்து செய்வதை பொறுத்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல.

வழக்குரை தாக்கல் செய்யும்போது உங்களுடைய வயது 50 என்றும், பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்யும்போது 56 என்றும், குறுக்கு விசாரணையின்போது 57 என்றும் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் அது சரியல்ல. பிரதிவாதி பெயரில் தாவா சொத்து கிரையம் ஏற்பட்டதற்கு பின்னிட்டு கிரையத்திற்குண்டான முத்திரை கட்டணம் சரியாக செலுத்தப்படாததால் தனி துணை ஆட்சியர் அவர்களின் நடவடிக்கையின் கீழ் முத்திரை கட்டணம் பிரதிவாதியால் செலுத்தப்பட்டுள்ளது, அது குறித்த விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அதேபோல, வருவாய் கோட்டாட்சியர் தரப்பில் தாவா சொத்திற்குண்டான முத்திரை கட்டணம் தொடர்பாக பிரதிவாதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்ட விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி பெயரில் உள்ள தாவா சொத்திற்குண்டான கிரைய ஆவணம் தொடர்பாக வருவாய் அலுவலர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்த நிலையில், உங்கள் தரப்பில் கிரைய ஆவணத்தை மறைக்கப்பட்டு வருவாய் துறையினர் மூலம் பட்டா உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது பிரதிவாதியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால் அது சரியல்ல.

வழக்குரையில் தாவா சொத்து விபரம் என்பதில் புஞ்சை என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். வழக்குரை பாரா 4 மற்றும் 5ல் சொல்லக்கூடிய சங்கதிகளை பொறுத்து நிருபணம் செய்யக்கூடிய ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி